# ஜோலார்பேட்டை நகராட்சி
## அவசரக் கூட்டம்

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் தேதி (01.12.2025) திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

**குறள் எண்.601** "சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா செய்யாமை மாசற்றார் கோள்".

"சிறப்பைத்தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்."

**பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்.119, மற்றும் 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.06.2025 மற்றும் அரசாணை (நிலை) எண்.289 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள்.08.09.2025 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி நகர்ப்புற உள்ளாட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மாமன்றம் மற்றும் நகரமன்றத்தில் நியமன உறுப்பினர்கள் நியமனம் செய்வது தொடர்பாக தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவினால் பரிசீலித்து S.புவனேஸ்வரி த/பெ.சம்பத், நெ.52C, சொரங்கன் வட்டம், வக்கணம்பட்டி, ஜோலார்பேட்டை என்பவர் தேர்வு செய்யப்பட்டு 26.11.2025 அன்று ஆணையர் முன்னிலையில் பதவியேற்று உறுதி மொழி எடுத்துக்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலகு குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசாணை எண்.(4ப) எண்.56, 21.11.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29143/2025/எச்3 நாள்.22.11.2025 தேதிய கடிதத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தினசரி காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் பணியாற்றும் 8 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் 100 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் ஆக மொத்தம் 108 பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி மேற்கொள்ள 27.11.2025 அன்று இரு உறை முறையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் 2 நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை. அதில் **"Tamil Caterers"** ஜோலார்பேட்டை என்ற நிறுவனம் மட்டும் தான் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் (Technical Bid Evaluation).

அதனை தொடர்ந்து **"Tamil Caterers"** என்ற நிறுவனத்தின் 28.11.2025 அன்று "Price Bid" திறக்கப்பட்டதில் ஒரு தூய்மை பணியாளருக்கு ரூ.46.00 வீதம் மற்றும் LWF+ வாகனம் வசதி உட்பட ஆக மொத்தம் 108 பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ரூ.1922119/ என Price Bid–ல் குறிப்பிட்டுள்ளார் என்ற விவத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | Providing Food Service under the Chief Minister's Food Scheme for Sanitary Workers in Jolarpet Municipality | 67.00<br>(3 வருடத்திற்கு) | M/s.Tamil Caterers, ஜோலார்பேட்டை<br>ரூ.1922119/–<br>0.58% மதிப்பீட்டை விட குறைவு<br>(ஒரு வருடத்திற்கு) |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
3. மேற்கண்ட பணிக்கு M/s.Tamil Caterers என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1074/2025/எச்1

நாள் : 27.11.2025
இடம்: ஜோலார்பேட்டை

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

# ஜோலார்பேட்டை நகராட்சி
## அவசரக் கூட்டம்

2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் தேதி (01.12.2025) திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ. எண். | பொருள் எண். | தீர்மான எண். | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 369 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | 2 | 370 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

(ஒம்)/-மா.காவியா
நகரமன்ற தலைவர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஜோலார்பேட்டை நரகாட்சி